'நண்பன்' பட பத்திரிகையாளர் சந்திப்பில் விஜய் கலந்து கொண்டார். அப்போது சினிமா பத்திரிகையாளர்கள் சிலர், 'உங்கள் தந்தை தானே இப்போது தயாரிப்பாளர் சங்க தலைவராக இருக்கிறார். அப்படியிருக்க தொழிலாளர்கள் பிரச்னையைத் தீர்த்திருக்கலாமே.. நடிகர்கள் சம்பளத்தைக் குறைக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்?' என்றெல்லாம் கேள்வி கேட்க முயல, உடனே பி.ஆர்.ஓ அவர்களைத் தடுத்து, 'கான்ட்ரவஸ்யாக யாரும் கேள்வி கேட்கக் கூடாது' என்று தடுத்துவிட்டாராம். அது மட்டுமல்ல, அடுத்தடுத்த பத்திரிகையாளர்கள் சந்திப்பில் அப்படிக் கேள்வி கேட்டவர்களை அழைக்காமலேயே தவிர்த்துவிட்டார்களாம்.



விஜய்



அப்பாவைத் தொடர்ந்து சினிமாவுக்கு வருகிறார் விஜய் பிரபாகரன். 'கேப்டன் பிரபாகரன்' படம் ரிலீசான நேரத்தில் பிறந்த இவருக்கு, விஜய் பிரபாகரன் எனப் பெயர் வைத்து அழகு பார்த்தார் விஜயகாந்த். சினிமா ஆசை துளியும் இல்லாமல் இருந்தவருக்கு, கடந்த ஆண்டு வந்தது சினிமா ஆசை. அப்பாவிடம் சொல்ல உடனே ஓ.கே. என்ற வார்த்தை வந்திருக்கிறது. சில மாதங்களுக்கு முன் வரை தம்பி ஏக வெயிட். ஆனால் ஒவ்வொரு நாளும் ட்ரில் எடுக்கும் கடுமையான உடற்பயிற்சிகளால் தன்னைச் செதுக்கி வருகிறார். எஸ்.ஆர்.எம். கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பொறியியல் படிக்கும் இவருக்குப் பிடித்தது கிரிக்கெட்தான். அப்பா விஜயகாந்துக்கே கிரிக்கெட் சொல்லிக் கொடுத்து அதன் மேல் ஆர்வம் வர வைத்தவர் இவர்தான். ஓய்வு நேரங்களை கிரிக்கெட் விளையாட்டுக்கே இப்போதும் செலவிடுகிறார். சினிமாவில் நடிக்கப் போகிறார் என்ற செய்திகள் வரத் தொடங்கியதும் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதைத் தவிர்த்து வந்தார். இப்போதுதான் மீடியாக்களுக்கு முதன் முதலாக தன் புகைப்படத்தை அனுப்பி வைத்திருக்கிறார். 21 வயதாகும் பிரபாகரனுக்குப் பிடித்த நடிகை எமி ஜாக்சனாம். பிடித்த நடிகர் யாராக இருக்க முடியும் அப்பா விஜயகாந்துதான்.

'தெய்வத்திருமகள்' படத்தில் நடித்ததிலிருந்து அனுஷ்காவுக்கும், அமலாபாலுக்கும் சொல்லிக்கொள்ள முடியாத அளவுக்கு நெருக்கம். அனுஷ்காவுக்கு இரண்டு வருட கால்ஷீட் நிறைந்துவிட்டது. இதனால் தனக்கு வரும் வாய்ப்புகளை அப்படியே அமலாபாலுக்கு அனுப்பி வைக்கிறார். தென்னக சினிமாவுலகில் இவர்கள் நட்பும், நிறைந்த கால்ஷீட்டும்தான் இப்போது பேச்சாக இருக்கிறது.



அனுஷ்கா

'பில்லா-2' போஸ்டர்களே பரபரப்பாக ஹிட்டாயிருக்கிறது. அதனால் படக்குழு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. இப்படத்தில் அஜித், டேவிட் என்ற சாதாரணத் தமிழ் இளைஞன் எப்படி 'பில்லா' என்கிற டானாக மாறுகிறான் (இன்னுமா இந்த உலகம் நம்மை நம்பிக்கிட்டிருக்கு?) என்பதே கதை. 'உன்னைப்போல் ஒருவன்' படத்தை இயக்கிய சக்ரி டோலோட்டி இப்படத்தை இயக்குகிறார். யுவன்ஷங்கர் ராஜா இப்படத்திற்கு இசையமைக்கிறார். படம் ஏப்ரலில் வெளியாக இருக்கிறது.

-மன்